REGISTERED No. M. 1318.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுக்தி வரு ஆடி மீ 1918-ம் ஆ ஜூலை மீ	மதி — கO.

உள்ளுறை:

	பக்கம்.
க. விவேகம்.	கOகூ.
உ. பாரதம்பாடிய பெருந்தேவனார்.	கககூ.
ங. பொதுமொழி.	ககரு.
ச. நம் தாய்மொழியும் அதன் பெருமையும். ...	,,
ரு. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ...	ககஅ.
சா. நாம் எதனை விரும்புவது?	ககசா.

பத்திராசிரியர்:— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

உள்ளூர்க்கு ...	ரூ ॰	வெளிநாட்டுக்கு ...	ரூ க
வெளியூர்க்கு ...	ரூ ௲	தனிப் பிரதி ...	அணா க

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ்

தமிழ்ப்பண்டிதர் ஆகிய

மகா மகோபாத்தியாயர்,

ஸ்ரீலஸ்ரீ வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய

அபிப்பிராயம்.

புதுவைத் தமிழ்ச்சங்கத்தார் வெளிப்படுத்திவரும் "தமிழ் மகவு" என்னும் பத்திரிகையிற் சில சஞ்சிகைகளைப் படித்துப் பார்த்தேன்; அப்பெயர் அதற்குத் தக்கதென்றே தோற்றியது. கற்றறிந்த புலவர்கள், பழைய தமிழ்ப் புலவர்களைப் பற்றியும் வள்ளல்களைப்பற்றியும் சங்க நூல்களைப்பற்றியும் பிற அரிய விஷயங்களைப்பற்றியும் இதில் எழுதிவருதலால் இக்காலத்தில் நூலாராய்ச்சி செய்வோர்க்கு இது மிக்க பயனை அளிக்குமென்று எண்ணுகிறேன்.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு [illegible]	காளயுக்தி ௵ ஆடி ௴ 1918-ம் ஆ ஜூலை ௴	மதி - ௧௦.

விவேகம்.

(௧௦௨ - ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிச் சிலர், பொருளிலார்க்குறவில்லை; பொருளே உறவுண்டாக்குவது; பொருளானே நலமெலாமாம். நட்டோர்ப்புறத்தலும், செற்றோர்த்தெறுதலும் பொருளானும். வறிஞனை மனைவியும் மதியாள், ஈன்றதாயும் பிறன்போல நோக்குவள்; இழிந்தோர்பாலும் பொருளுளதேல் எல்லாருஞ் சென்று எதிர்கொள்வர் இங்ஙனமாகையினாற் பொருளே பொருள்; அதிற் சிறந்தது இவ்வுலகத்துப் பிறிதில்லை என்றெண்ணுகின்றனர். அச்செல்வத்தை ஈட்டலுந்துன்பம்; காத்தலுந்துன்பம்; செலவால் குறையிற்றுன்பம்; கள்வராதியராற் கெடிற்றுன்பம்; கெடும்போது, தன்னை உடையாரது முன்னைய நிலையையுங் கெடுத்துப்போகும். ஒருசாரார் செல்வம் என்றபெயர்க்குப் பொருள் எங்கு நில்லாதுபோவோம் என்றாகும் என்பர். மேலோர்களால் வெறுக்கப்படுதலால் வெறுக்கையென்றும் பெயர் உளது. இங்ஙனம் இயல்பாகவே கேடுடையதாகிய பொருட்செல்வம் பல்வகைக் கிலேசத்திற் கிடம். அதிற் பற்றறுகலை இன்பத்திற்குக் காரணம். இதற்கு மேலாகியதூஉம்

அழிவிலதூஉமாகிய செல்வம் அருட்செல்வமே யென்றுராய்ந்தறிந்து அஃதடைய முயல்வதே, விவேகமுற்றோர் பெறும் பயனும்.

இது: கெடுவ தாம்பொருட் செல்வமே பல்வகைக்
கிலேசமற் றதுதன்னை
விடுவ தேசுக மெனவுமோர்ந் திலைமுனம்
விடுத்துளோர்க் குனைப்போலும்
நெடிய யூகம தில்லையோ சொல்லுதி
நெஞ்சமே இனிப்பற்றற்
றடைது மேலரனருளையே பொருளென
அருஞ்செல்வ மதுதானே. (வைராக்கியசதகம்.)

"அருட்செல்வம் செல்வத்துட்செல்வம் பொருட்செல்வம்
பூரியார்கண்ணு முள" (குறள்)

என்றவைகளானு மறிக. (பூரியார்: இழிந்தார்.)

தேர் யானை குதிரை காலாள் என்னு நால்வகைச்சேனைகளும் தற்சூழ, வெண்கொற்றக் குடைநிழற்றப் பல்வகைச் சிறப்புடன் பட்டத்து யானையிற் பாங்குடனிவர்ந்து இலங்கிலைவே லேந்திய அரசர் பலர் அருளை யெதிர்பார்த்து நிற்பச் செல்லும் சக்கரவர்த்தியின் சிறப்பு இவ்வுலகத்தின் மேம்பட்டதன்றோ? அவ்வகைச்சிறப்பை யடையமுயற்சிசெய்வதே விவேகமெனின், அற்றன்று. அச்சிறப்புங் கனவேபோல்அழிதன் மாலையது ஆதலின், அது விரும்புவது விவேகமன்று. குடைநிழலிலிருந்து யானையை யூர்ந்துசென்ற அரசர் நடையால் வருந்தி ஒரூரில் செல்வதும் செய்வர். இது இராமர் அரிச்சந்திரன் நளன் தருமர் முதலியோர்கள் கதையால் நன்கறியலாம். அரிச்சந்திரன் பிறர்க்கடிமையுமானன்; மனைவியை மைந்தனையிழந்தான். நளனும் மனைவியாதியரை யிழந்து பிறனுக்குக் குற்றேவல் பூண்டான். பிறரும் பலபாடுகள் பட்டனர். அவரடைந்த செல்வமென்னை? இதற்கு மாறாக அருட்செல்வமடைந்தவர்களை இவ்வுலகமன்றித் தேவலோகத்தினரும் வந்து வந்திப்பார்களே. இதற்கு அகத்தியர் வசிட்டராதியோர் சரிதங்களே சான்றாகும். ஆதலின், அருட்செல்வ மடைந்தவர்களே விவேகத்திற் சிறந்து பயன்கொள்வாராவர். அவர் அவ்வாறடைந்தபின்

இவ்வளவுகாலம் பயனின்றி நாள்கழிந்தனவே என்றெண்ணி இரக்கப்படுவார்களென்க. அஃதொக்கும். இனி அருள்பெறுமாறென்னையெனின், "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்–ஈண்டுமுயலப்படும்" என்பதால் தவஞ்செய்துபெறலாம். அங்ஙனம் தவஞ்செய்து அருளைப்பெறுவோம்; அதற்கோர் இடம் வேண்டுமே என்று அதிற் பற்றுவைப்பதும் விவேகமன்று. ஏனெனின், இவ்வுடலே நமக்கு நிலைத்தஇட மன்றாதலின், இவ்வுடற் கிடமாகிய மண்ணை இது என்வீடு, இது என்காணி என்று கருதிக் கொண்டிருந்து முடிவில் அம் மண்வடிவை யடைவது தகுதியா? அன்று. இனி, இறைவன் றிருவடியே யெவ்வுயிர்க்கும் புகலிடமென் றறிதலே விவேகமாம். இடப்பற்றற்றுத் தவம்செய் காலைப் புகழையும் விரும்பலாகாது. விரும்பித்தேடின் அப்புகழ், அநித்தமாகிய இத்தேகத்தோ டொழியுமன்றி மறுபிறப்பின்கண் எடுத்ததேகத்தின்கண் வந்துசேராது. அவ்வாறு சேர்வதுளதேல் முன்பிறப்பில் யாம் என்ன புகழ்பெற்றிருந்தோம் என்று கருதி நோக்கின் தெரியவேண்டும் அங்ஙன மின்மையால் இகழ்ச்சி பெறினு மவ்வளவேயாம். இனி அழியாப்புகழாவது பேரின்பவீடடைதலொன்றுனேயாம். பிறப்படைவதாலே இகழ்வு வருமென் றறியவேண்டும்.

இதுகாறுங் கூறியவாற்றான் புறப்பற்றுக்களாயுள்ள உறவு பொருள் சுகம் இடம் புகழ் என்னு மிவ்வைந்தையும் விடுத்து, சிவனது திருவடியே துணையென உளங்கொண்டு அத்திருவடியைத் தவஞ்செய்து பெறவேண்டும் என்று துணிவது விவேகத்தின் பயனென் றறிக. (தொடரும்)

பத்திராசிரியர்.

பாரதம்பாடிய பெருந்தேவனார்.

(க0எ - ம் பக்கத் தொடர்ச்சி.)

(3) **பாவலர் சரித்திர தீபகக்காரர்:**-பாரதம் பாடிய பெருந்தேவனார் கடைச்சங்கப் புலவரென்றும் பாரதவெண்பாவைப் பாடினரென்றும் கூறுவர்.

(4) பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் "இவர் எட்டுத்தொகையுட் பெரும்பாலனவற்றுக்கும் காப்புச்செய்யுள் பாடினவர். பெருந்தேவனா ரெனப் பிறரு முளராதலான், அவரின் இவர் வேறென்பது தெரியப் பாரதம்பாடிய பெருந்தேவனாரென அடைமொழி கொடுக்கப்பட்டார். வியாசபாரதத்தை வெண்பாவும் அகவலும் உரைநடையும் விரவிவரப்பாடி வெளியிட்டமையிற் பாரதம்பாடிய பெருந்தேவனா ரெனப்பட்டார். இவர் பிறந்தது தொண்டைநாடு. "சீருறும் ... ... பாரதம்பாடும் பெருந் தேவர் வாழும் பழம்பதிகாண், மாருதம் பூவின் மணம்வீசிடுந்தொண்டை மண்டலமே" என்று தொண்டைமண்டல சதகங் கூறுநிற்கும். இப்பொ ழுது பாரத வெண்பாவென அச்சிட்டு வழங்குநூலில் முதலில் விநாயக வணக்கமும் அடுத்துத் தெள்ளாற்றிற் போர்வென்ற அரசன் சிறப்பும் கூறுவது காரணமாக இவர் தொண்டை நாட்டிற் பிறந்தவரென்று படிக் காசுப் புலவர் தமது தொண்டை மண்டல சதகத்து எழுதிவைத்தார். தெள்ளாற்றிற் போர்வென்றது கடைச்சங்கம் அழிந்த பல்லாண்டுகட்குப் பின்னரேயாம், அதனைக் கூறுதலின் இப்பெருந்தேவனார் கடைச்சங் கப்புலவரல்லரென்பது தேற்றம். ஆதலின் இப்பொழுது வழங்கும் பாரதவெண்பாப் பெருந்தேவனார் பாடிய தன்றெனவும், பெருந்தேவனார் பாடியது உதாரணமாக எடுத்தாண்ட சில செய்யுளன்றி நூல்முழுவதும் அழிந்துவிட்டதென்றும் சில பெரியார் கூறுவதுண்மையெனக்கொண்டு தொண்டைநாட்டினரென ஒரு தலையாகக் கொள்ளாதொழிக. அச்சிட்டு வழங்கும் பாரதவெண்பா நடையையும் உதாரணமாக முன்பெடுத்தாண்ட பாரதவெண்பா, அகவல்களின் நடையையும் ஒப்பு நோக்கியறிக." (நற் றிணை பாடினோர் வரலாறு, பக்கம் 54)

(5) அ. குமாரசாமிப்புலவர்:—பெருந்தேவனார் என்னும் பெயரு டைப்புலவர் பலர். இங்கே கூறப்படும் புலவர் பாரதம்பாடிய பெருந் தேவனார். இவர் நாடு "பாரதம்பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண் தொண்டை மண்டலமே" என்று படிக்காசுப் புலவர் கூறுவர். இவர் புற நானூறு குறுந்தொகை முதலியதொகைநிலைச்செய்யுள்களில் வருங் கடவுட் பாட்டுக்கள் பாடினவர்; புறநானூற்றிற் சிவபிரானுக்கு வணக் கங் கூறுவர்; நற்றிணையிலே நாராயணமூர்த்திக்கு வணக்கங்கூறுவர்; வெண்பாவும் அகவலும் உரைப்பாட்டுமாகப் பாரதகதையைப் பாடி னவர்; கடைச்சங்கப்புலவருள் ஒருவர். (தமிழ்ப் புலவர் சரித்திரம் பக்கம் 140).

(6) ஸ்ரீமத் K.V. சுப்பிரமணிய ஐயர், B.A., F.R.H.S., : கடைச்சங்கத் திறுதிக்காலத்திருந்த புலவர்கள் 49-பெயரையும் திருவள்ளுவமாலையில்

கூறப்பட்டிருக்கிறது; இது சங்கப்புலவர்களின்பேரிற் கூறிய பாட்டோடு ஒத்திருக்கிறது. கடைச்சங்கமென்று சொல்லப்படுகிற அக்கூட்டத்தில் பிரகாசித்தோர் நக்கீரர், பெருந்தேவனார், மாங்குடிமருதனார், கல்லாடர், சாத்தனார் என்பவர்கள். திருவள்ளுவர் ஆகிய குறளாசிரியரைக் கடைச்சங்கத்தோடு சேர்க்கும் பரம்பரைச்செய்தியால் இவர்கள் சமகாலத்தவ ராக்கப்படுகின்றனர். இவர்கள் எல்லோரும் குறளை மனமாரப் புகழ்ந்திருப்பதும் அது சங்கமேறிய பொழுதேயாம். இக்கன்னபரம்பரைச் செய்தி யுண்மையாவென ஒரு பரீக்ஷை செய்கிறேன்.

பெருந்தேவனார் தமிழில் மகாபாரதமியற்றியவர். இதனில் தெள்ளாறெறிந்த நந்திவர்மனைத் தனது ஆதரிப்பாளனாகக் கூறுகிறார். இவன் கி. பி 9-ம் நூற்றாண்டி லிருந்தவ னென்பதற்கு அநேக கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. ஆகையால் பெருந்தேவனாரும் அவரது சகபாடிகளும் இக்காலத்தில் தான் இருந்திருக்கவேண்டும். இதுதான் கடைச்சங்கம் முடிந்தகாலமாகவும் இருக்கவேண்டும். தொகை நூல்களாகிய அகம், புறம், பத்துப்பாட்டு இவைகளைத் தொகுப்பித்ததில் பெருந்தேவனாரும் சம்பந்தப்பட்டிருக்கிறார். இவ்விதமாகப் பெருந்தேவனார் குறளையாராய்வதிலும், தொகைநூல்களைத் தொகுப்பதிலும் சம்பந்தப்பட்டிருக்கிறார். இவைகளால் முதலாம் நூற்றாண்டிலிருந்தார் என்பது மேற்கூறியவைகளால், இக்கூற்றுக்கு விரோதம் கூறுவார்க்கு அநுகூலியாகின்றார்.

*　　*　　*　　*　　*

தலையாலங்கானத்திற் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய மாங்குடி மருதனார் இப்பெருந்தேவனாரோடு ஒப்பவீற்றிருந்த பெரும்புலவர். இந்நெடுஞ்செழியனே சங்கநூல்களிலேயே பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் வழியினன் என்று கூறப்படுகிறது. எட்டாம் நூற்றாண்டில் கொடுக்கப்பட்டதாகக் காணப்படும் ஒரு செப்புப் பட்டயத்தில் இவனின் பின்னோர் வரிசை கூறப்படுகிறது, இந்த வமிசாவளி பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியிலிருந்து எட்டுத்தலைமுறைகளைக் காட்டுகிறது. இதனில் மதுரகவியை மந்திரியாக வுடைய பராந்தக நெடுஞ்சடையன் கடைசியிலுள்ளவன். இவனுடைய சாசனமொன்று 769-70-ம் வருஷத்ததாகக் காணப்படுகிறது. இவன் தானென்பது அச்சாசனத்தில் இவன் மந்திரி மதுரகவியின் பெயரோடு இவனைப் பராந்தக சடையனென்பதால் வலியுறுகிறது. ஆகையால் இந்த வமிசாவளியில் நெடுஞ்செழிய னெங்கிருக்கின்றானென்று பார்க்கவேண்டும். 'இந்திய புராதனம்' (INDIAN ANTIQUARY) 1911-ம் வருஷத்து ஆகஸ்டு

மாதத்துச் சஞ்சிகையில் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை முன்னோனாகப்பெற்றுத் தலையாலங்கானத்துச் சிறப்புப்பெற்றவனுமான நெடுஞ்செழியனே இவன் என்று காட்டியுள்ளேன். இவன்வேறு, தலையாலங்கானத்துச் செருவென்றவன் வேறு என்று பிறர் சந்தேகிக்கா வண்ணம் (1) இவனைத்தவிர வேறு ஒருவரும் செழியன் என்ற பெயரை வகிக்கவில்லை என்றும் (2) வம்சாவளியைக் கூறும் மற்றொரு செப்புப் பட்டயத்தில் நெடுஞ்செழியன் முதல் வம்சாவளியிருப்பினும், நெடுஞ்செழியன் தலையாலங்கானத்தில் செருவென்ற சிறப்பைக் குறிப்பதாலும் தேற்றமாம் என்று கூறியுள்ளேன் ஆகையால் நெடுஞ்செழியனை மேலேற்றவாவது கீழிறக்கவாவது முடியாது.

"இவனுடைய காலத்தைத் தீர்மானிப்பது வெகு எளியது; இவனிலிருந்து பின்வந்த நான்காம் தலைமுறையுடையான் கி-பி-770-ல் இருந்தபடியால் நெடுஞ்செழியன் 620-50-ல் இருந்தானென்று கொள்ளுதல் தவறாகாது. இந்தக்காலத்தை நிச்சயிக்க மற்றொரு ஆதாரமும் அதிர்ஷ்டவசமாய்க் கிடைத்துவிட்டது. இந்த வம்சாவளியில் நெடுஞ்செழியனின் பின்னோனை மாறனொருவன் நெல்வேலி யுத்தத்தில் வென்றதாகக் கூறப்படுபவனுக்குக் காலம் 650-680-என நிச்சயித்திருக்கிறோம். சிவபெருமானது தொண்டரான திருஞான சம்பந்த சுவாமிகளது சமகாலத்தாசனுவான் நெடுமாறனென்பான் இதேநெல்வேலியில் என்றுந் தொலையாப் புகழ்பெற்றானென்று (பட்டயத்திலுங்கூட) கூறப்படுவதாலும், வாதாபிவென்ற நரசிம்மவர்ம்மன் காலம் 7-வது நூற்றாண்டின் மத்தியகால மென்பதாலும் நன்கு வலியுறுத்தப் படுகின்றது. இவைகளால் நெடுஞ்செழியன் காலம் சந்தேகமறத் தெள்ளியப்படுகிறது. இப்பொழுது **"சங்ககாலத்தை முதலாம் நூற்றாண்டின் இறுதி என்று கூறும் நமது சர்வகலாசாலைச் சரித்திர ஆசிரியரைப் பணியத்துக் கழைக்கிறோம்."** (The Age of the Tamil Sangam in the Hindu 1917).

இவ்வாறு பலதிறப்படப் பலரும் உரைப்பதால் இவற்றில் எது உண்மையென ஆராய்வாம்.

(தொடரும்)

S. சோமசுந்தர தேசிகர்,
இலக்கணவிளக்க பரம்பரை.
திருவாரூர்.

பொது மொழி.

பொதுமொழியாவது: விரவியிருக்கும் பல பொருள்களுள்ளே தலைமையும் பன்மையும் நோக்கி அவற்றால் அப்பொருள்களுக்குப் பெயராயிடும் பொதுச்சொல். நன்னூலாரும் "பொதுமொழி தொடரினது படலமாகும்" என்றார். எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்புழி எழுத்து, சொல் என்பன பொதுமொழிகள். பொதுமொழிகள் உருபுகள் விரியாது தொகைநிலைத்தொடர்களாய் நிற்றல் ஆவசியகம். திருக்குறள், இராமாயணம் முதலிய நூல்களிலே வரும் பொதுமொழிகளாகிய கடவுள் வாழ்த்து, அறன்வலியுறுத்தல், அரசியற்படலம், நட்புக்கோட்படலம் முதலியவைகளை நோக்குக. புதல்வரைப் பெறுதல் முதலியன விரியினும் அவையும் இயைபுடையன. இப்போது வெளிப்படுஞ் சில புத்தகங்களின் விஷயபாகங்களுக்கு இடும் பெயர்கள் உருபு விரிதலன்றிப் பன்மொழித்தொடராய் நீளுகின்றன. பெயர்கள் சுருங்கி நிற்றலே சிறப்பு.

அ. குமாரசுவாமிப் பிள்ளை.
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

நம் தாய்மொழியும் அதன் பெருமையும்.

1. நாம் வசிக்குமிப் பாதகண்டமானது கடவுளினுடைய சிருஷ்டியில்சிறந்ததாகியதொன்றென்பதுயாவரும்நன்கறிந்தவிஷயம். நாம் இந்துமாதாவின் புத்திரர்களானதால் நமக்கு இந்துக்கள் எனப் பெயர் வந்தது. இவ்வாறுபெயர்பெற்றநாம் இப்போதுபலபாஷைகளைவழங்கிவருகிறோம். இவ்வாறு ஒரேவயிற்றில் அவதரித்த நாம் பலபாஷைகளைப்பயில்வது சரியல்ல. ஒரு அன்னைவயிற்றில் அவதரித்த குழந்தைகள் ஆணும் பெண்ணுமாக இருக்குமே யொழிய வேறுவகையாயிராதென்பது திண்ணம். ஒருகால் ஆணும் பெண்ணும் கலந்த ரூபத்தோடு பிறக்கினும் உலகத்தோர் அதனைக் கைக்கொள்ள மாட்டாரென்பது திண்ணம். அதனைப்போல் இந்தியாவென்னும் நமது அன்னை பெண் ஆண் அதாவது: தமிழ் ஸம்ஸ்கிருதமென்னும் இரு குழந்தைகளை யீன்றனள்.

2. இவ்வாறு நம் தாயினிடத்து உதித்த இரண்டு பாஷைகளில் ஒன்று வடபாகமும் மற்றொன்று தென்பாகமும் பரவப்பெற்றன. இதில் வடபாகம் பரவப்பெற்ற குழந்தையின் பெயர் வடமொழி (ஸம்ஸ்கிருதம்)

என்றும், தென்பாகம் பரவப்பெற்ற குழந்தையின் பெயர் தென்மொழி (தமிழ்) என்றும் வருக்கப்பெற்றன. ஆயினும் இப்போது நிகழும் தமிழ்ப்பாஷை ஆதியில் திராவிடபாஷையென ஒரே பெயரொடு வழங்கி வந்ததென்று ஆன்றோர் கூறுகின்றனர். திராவிட பாஷையாவது, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற நான்குபாஷைகளும் ஒன்றுசேர்ந்த ஓர்வித பாஷை யென்பதாகும். இது காலவேற்றுமையின் வேறுபாட்டால் பலகாலஞ் சென்றபின், முன்சொன்ன நான்கு பாஷையின் பெயரொடுகூடப் பிரிந்தது. ஆயினும் இந்த நான்குபாஷைகளின் மூலபாஷையின் பெயர் தமிழ். மற்றும் இந்த நான்குபாஷையின் இலக்கண இலக்கியங்களும் முக்கியமாய் தமிழையே யொத்திருக்கின்றன என்பதைப் பார்த்தறியலாம்.

3. தமிழ்ப்பாஷையைத் தவிர மற்றைய மூன்றும் சிற்சில விடங்களில் நிகழ்வதேயன்றித் தமிழைப்போல் தென்பாக முழுவதும் பரவப்பெறும் ஆற்றலுடையனவல்ல. இன்னுமிதனைத்தவிரப் பற்பல பாஷைகள் பற்பல விடங்களில் பரவினும் அப்பாஷைகள் ஒவ்வோரிடங்களிலும் ஒவ்வொருவராலும் தற்காலத்தி லுண்டுபண்ணின பாஷையேயன்றி ஆதிபாஷையல்லவென்பது யாவரும் எளிதில் அறியக்கூடியது. இதனால் யான் அன்னியபாஷைகளை நிந்திக்கிறதாக எண்ணிக்கொள்ளக்கூடாது. நாம் ஒவ்வொருவரும் நாம் பிறந்த தாயின் வரலாற்றை அறியாதிருந்தால் பிறர் நிந்திக்க இடமாகும். நம்மிந்திய மாதாவின் மக்களாகிய நம்மவரை நாம் அறியாதிருத்தல் தகுதியல்ல.

4. இந்தியமாதாவின் குழந்தைகளில் தமிழ்க்குழந்தையின் புத்திரர்களாகிய நாம் நம் பாஷையை மறந்து வேறுபல பாஷையைப் பயின்று வருவது தற்காலத்திற் கேற்ப நன்மையைத் தரத்தக்கதே தவிர உண்மையில் என்றும் நன்மையைத்தருவதல்ல வென்பது யாவருக்கும் எளிதில் விளங்கும்.

5. இவ்வுலகின்கண் தாய்தந்தையரைவிட வேறு உயர்ந்த தெய்வமில்லை என்பதற் கேற்ப நமது மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியாரும், "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்று கூறியுளார். இதனை ஆலோசியாது நம் தமிழ் ஆகிய தாய்ப்பாஷையை மறந்து விடுவது தீராப்பாவமேயாகும். தமிழ் மக்களாகிய நாம் நம் தாய்மொழியாகிய தமிழை வலியவே கற்கவேண்டிய திருப்ப நாம் அதனை நாடாதிருப்பது தகுதியல்ல உலகப் பிரசித்தமான இராமாயணத்தில் கைகேசியின் மொழிக்காக எவ்வளவு துன்பம் வந்தபோதும், தாயின்மொழியை

மறக்கலாகாதென்னும் உறுதியினால் ஒழுகிய இராமர் முடிவில் சுகமே எய்தினரன்றி வேறில்லை. ஆனதுபற்றித் தமிழ்மக்களாகிய நாம் நம் தாய்ப்பாஷையான தமிழைக் கைநழுவவிடலாகாது. அரசபாஷையாகிய ஆங்கிலேயத்தைக் கற்றபோதிலும் தமிழையும் பாராட்டி வருவோமானால் தாயை வழிபடும் பலன் நமக்கும் சித்திக்காமல் போகாது.

6. மற்றும் தமிழினது பெருமையைப்பற்றி ஆராய்வோமானால் திருவிளையாடற் புராணத்தில்,

"தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்ததுமுதலை
யுண்டபாலனையழைத்தது மெலும்புபெண்ணுருவாக்
கண்டதும்மறைக்கதவினைத் திறந்ததும்கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச்சொற்களோ சாற்றீர்"

என்று கூறப்பட்டுளது. இன்னும் பலவுள.

ஆரியம் தமிழ் என்னு மிவ்விரண்டும் பூர்வீகபாஷைகள். இவையிரண்டும் கடவுளினிடத்தே உற்பத்தியானவை யென்று இதிகாச புராணங்கள் கூறுகின்றன. இவைகள் உண்டான காலம் திட்டமாய்க் கண்டுபிடிக்கப்படவில்லை. தமிழ்ப்பாஷையைத் தந்தருளியவர் அகத்தியமுனிவர் என்றும் அவரே அதன் விருத்திக்குக் காரணரென்றும் சிலர் கூறுகின்றனர். அவ்வாறு கூறுவது ஒருசிறிதும் பொருந்தாதென்பதற்குக் காஞ்சிப்புராணம் சாக்ஷியமாக விருக்கிறது.

"வடமொழியைப்பாணினிக்கு வகுத்தருளியதற்கிணையாத்
தொடர்புடையதென்மொழியை யுலகமெலாந்தொழுதேத்துங்
குடமுனிக்குவலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகரெனிற்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரேகணித்தறிவார்."

என்றபடி கடவுளினிடத்தே இரண்டும் உற்பத்தியானதென்பது தெரிகிறது. ஸம்ஸ்கிருதத்திற்குப் பாணினிபோல் தமிழிற்கு முதன் முதல் இலக்கணம் செய்தவர் அகஸ்தியரே தமிழும் ஆரியமும் சமத்துவமுடையனவாகும். தமிழ் என்பது தனக்கு இணையில்லாத பாஷை அல்லது இனிமையுள்ள மொழியெனப் பொருள் படுதலின், ஆரியத்திலும் சிறந்தது என்று பெறப்படுவதினாலும் கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மகப்பேற்றை உடையதினாலும், தன் இனிய ஓசையினாலும், மிருதுத் தன்மையினாலும், தேவாரதிருவாசகவசீகரணத்தினாலும் பெண் இலட்சணம் அமையப் பெற்றது. (தொடரும்)

மாணவன்.
திருவாரூர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்."

(க0அ-ம் பக்கத் தொடர்ச்சி.)

தந்தை தாயரைப்பணிதலே சிறந்ததோர் தருமமென்று மேலான வேதசாத்திரங்கள் கூறுகின்றன. ஆதலின், அவர்கள்பால் மகிமையாகக் கருதி அவர்கள் சொல்லும் புத்திமதிகளைக்கேட்டு அதன்படி நடத்தலே பிள்ளைகளின் கடமையுட் கடமையாம். "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை" என்றும் போந்த நீதிவாக்கியங்களைக் கவனிக்க. பண்டைக்காலத்து நல்லோர்கள் எத்தனையோபேர் தம்தாய். தகப்பன்மாருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள் என்பதைப் பற்றி அநேக சரித்திரங்கள் நம் நாட்டுப் புராணேதிகாசங்களி லிடம் பெற்றிருக்கின்றன.

"ஆழிசூ ழுலகமெல்லாம் பரதனே யாளநீபோய்த்
தாழிருஞ் சடைகடாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூழிவெங் கானநண்ணிப் புண்ணியத் துறைகளாடி
யேழிரண் டாண்டில்வாவென் றிசைத்தன னரசன்........."

என்று தன் சிற்றன்னையாகிய கைகேசி சொல்லக்கேட்ட அக்கணமே அவள் கொடுத்த மரவுரியைத் தரித்து மனைவியோடும் தம்பியோடும் பிதுர்வாக்கிய பரிபாலனத்தின்பொருட்டு நாடுதுறந்து காடடைந்து உழன்ற எங்குலதெய்வமாகிய இரகு நாயகரின் அற்புதச் சரித்திரத்தைப் பாரகாவியத்திற்படித் தறியாதாரியார்? எவன் ஒருவன் தன் தாய் தந்தையர்களை நன்கு பணிந்தொழுகுகின்றானோ அவன் நற்றன்மையிலும் ஞானத்திலும் சிறந்து விளங்குவானென்பது திண்ணம்.

இன்னும் அவர்களைப் பணிதலோடு நில்லாமல் அவர்கள் விருத்தாப்பியதசை யுடைந்தகாலத்து யாதொரு குறைவும் நேரிடாமல் எப்பாடு பட்டாகிலும் அவர்களுக்கு அன்னவஸ்திராதிகள் அளித்து உபசரிக்க வேண்டும். குழவிப்பருவத்தில் நாம் இச்சைப்பட்டுக் கேட்டபதார்த்தங்களையெல்லாம் அவர்கள் பிரியத்துட னளித்ததுபோல் தள்ளாண்மைக் காலத்தில் அவர்கள் பிரியப்பட்ட பண்டங்களையெல்லாம் நாம் வழங்க வேண்டும். இதுபற்றி யன்றே ஔவையும் "தந்தைதாய்ப்பேண்" என்று கூறிப்போந்தனள். நீ உன் பிதாவையும் மாதாவையும் காப்பாற்று என்பது அதன்பொருள். அவர்கள் தேகவியோக மடைந்தபின்னர் அவர்களுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்க ளியாவையும் குறைவறச்செய்து முடிக்கவேண்டும். தாய் தகப்பன்மார் கடன்களைக் கழிப்பதற்கு முற்

றத்துறந்த முனிவர்களும் காத்திருக்கின்றார்களெனின், அவர்கள் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? பற்று முற்று மற்ற பட்டினத்தடிகள் தன் தாய் மரிக்குமளவும் காத்திருந்து அவளிறந்தவுடன்,

"ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கலசப்பா றந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி"

என்பது முதலாகச் சில செய்யுள்கள் பாடி வியசனப்பட்டு அவளுடலைத் தகனஞ்செய்து உத்தரகிரியை முதலானவைகளும் செய்து முடித்துச் சென்றார் என்பது யாவரும் அறிந்தவிஷயமாம்.

இப்படி யிருக்க, அநேகம் பிள்ளைகள் தங்கள் தாய்தந்தையர்களைச் சிறிதும் மதிக்காமலும் அவர்கள் பேச்சின்படி நடவாமலும் கர்வங்கொண்டு அவர்களைக் கெட்டபாஷைகளினு லிழிவாகப்பேசி யேசி அவமதிப்பாக நடக்கின்றனர். அது எவ்வளவு மதியீனமும் மானக்கேடுமாகும்? இம்மட்டோ? இன்னும் சிலர் மாதாபிதாக்கள் தங்களை வளர்த்து மனிதனுக்கி விடும்பொருட்டுப் பட்ட கஷ்ட நஷ்டங்களைச் சிறிதும் நினையாமல் அவர்களுடைய விருத்தாப்பிய தசையில் அவர்கள் கஞ்சிக்கும் கந்தைக்கும் படாதபாடு படும்படி விட்டு "ஆத்தாள் சூத்து அம்பலமாம் கும்பகோணத்தில் கோதானமாம்" என்ற பழமொழிக் கிணங்க மனைவி மக்களுடன் விலாப்புடைக்கவுண்டு களிக்கின்றனர். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை-செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்ற வள்ளுவர் வாக்கின்படி தாய்தந்தையர் செய்த நன்றியை மறந்த இப்பாதகர்களுக்கும் உய்வகையுண்டோ?

(தொடரும்)

நா. ராமசாமி நாயகர்,

கூத்தப்பாக்கம்.

நாம் எதனை விரும்புவது?

(கசூ - ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விருவகைச் சாதனங்களின் முதிர்ச்சியால் சமை, தமை, திதிக்ஷை, உபரதி, சிரத்தை, சமாதி என்னும் அறுகுணங்களும் உளவாகும். அவையாவன: இந்திரிய நிக்கிரகம், மனதின் அமைதி, காமக்குரோதாதிதிக்குணங்களின் அழிவு, புறக்கருமத்தியாகம், குருசாஸ்திர விசுவாசம்,

சித்த ஏகாகாரநிலை என்பனவாம். இவை தனித்தனிக் கூறப்படினும் இவற்றில் ஒன்று உளதேல் ஏனையவும் உளவாம். ஒன்றிலதேல் ஏனையவுமிலவா மாதலின், இவ்வாறினையும் ஒரேசாதனமென ஆன்றோ ரறைகுவர். இச்சாதனத்தை இடைவிடாது அதன் முடிவுவரையில் கைக்கொண் டொழுகின் சர்வலோகங்களினும் அநித்தியம் அசுத்தம் துக்கம் என்ற தோற்றம் உளதாம். ஆகவே, நித்திய சுத்த சுகசொரூபமாகிய முத்தியின்கண் அதி தீவிர இச்சை உதிக்கும். இவ்விச்சையாகிய சாதன முதிர்ச்சியால் துறவு சித்திக்கும்.

அத்துறவு புறம் அகம் என இருவகைத்தாம். புறத்துறவாவது: தனதானியாதி செல்வத்தின்பா லுளதாம் பொருட்பற்றினையும், மாதா பிதா மனைவி மக்கள் முதலியோர்பாலுளதாம் உயிர்ப்பற்றினையும் முற்றும் விடுதலாம். அகத்துறவாவது: சரீர இந்திரிய கரணங்களின்கண் உள்ள அபிமானம் அல்லது அகம்புத்தியை ஒழித்தலாம். இவ்விருவகைப்பட்ட துறவொன்றே உண்மையின்பத்தைத் தரத்தக்கது.

"யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்தஉலகம் புகும்" என்றார் பெரியோர்.

இத்துறவி லொழுகுபவன் நோக்கம் எவ்வாறிருக்கவேண்டுமெனின், முதிர்வேனிற் காலத்து மலைக்கட்படுந்தீ வெப்பத்தான் மெய்வருந்தி நீரெங்குளவென்று தேடும் அந்தகரைப்போலும், ஆவின்கன்று காலை மாலையாகிய காலத்துத் தன் தாய்ப்பசுவை மிகுந்த அன்போடுந் தேடல் போலவும், ஓர் விடயத்தை நச்சிய அதிமோகி யொருவன் அதனான்வரும் இன்பத்தைக் கருதிக்கருதி அவ்விடயம் என்று கிடைக்குமோ வென்று அதனையே தேடல்போலவும் பேரின்பத்தைக் கருதிக்கருதி அதனைக் கொடுக்கு ஞானாசாரியரை என்றைக்கடைவோ மென்று அவரையே தேடிக்கொண்டிருக்கவேண்டும். இதற்கு அதி தீவிரதர பக்குவமென்று பெயர்.

குன்றழலி னொந்துநீர் தேடுங் குருடரைப்போல்
கன்றுபசு வைப்பார்க்குங் காலம்போல்-ஒன்றொன்றில்
வேட்டவதி மோகி விடயம்போல் சற்குருவைத்
தேட்டம்அதி பக்குவமாய்த் தேர்.

என்னுஞ் செய்யுளால் இதனியல்பு அறிக.

இத்துறவியின் பக்குவங்கண்டு இவனது மோக்ஷ இச்சையைப் பூர்த்தி செய்வதறகு இறைவனே குருமூர்த்தங்கொண்டு வெளிப்பட் டருளுவன்.

(தொடரும்)

சோ. வேலாயுத முதலியார்.

அம்பிகாபதியும், அரசிளங்குமரியும்.

இப்பெயர் பூண்டதோர் தமிழ் நாடகத்தைக் கண்ணுற்றேன் இயல் இசை நாடகம் என்னு முத்தமிழ்க்குள் இயற்றமிழ் இலக்கண இலக்கியங்களே இப்போது கிடைக்கின்றன. ஏனை இரு வகைத் தமிழும் அரியவாயின. நாடகத் தமிழ்க்கு இயலும் இசையும் உதவியாம். இந்நாடகமே அறிஞருயர்ந்தோர் குறைந்தோர் யாவரையும் எளிதின் மகிழ்விப்பது. இதனாற் பெரும்பயனுண்மையோர்ந்து, சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள் இப்புத்தகம் வெளியிட்டனர். இது தமிழ்க்குபகாரமே. பழயநாடகத் தமிழ் இலக்கிய முறையின் குறிப்பு, சிலப்பதிகாரம் கோவை முதலியவற்றில் இருப்பதைத் துணைக்கொண்டியற்றப்பட்டது; இனிமையான வசனநடையும் செய்யுள் நடையும் உடையது; காதற்சுவையைக் கனின்பெறப்புனைவது; நீதிபலவற்றைநேரிதினிகழ்த்துவது; இது கம்பரது புதல்வர் அம்பிகாபதியின் சரிதமே. இதைப் படிப்போர்க்குத் தமிழ்ச்சுவையோடு மகிழ்ச்சி பெருகுமென்பதொருதலையாம். கிரவுன் சைசில் 160 - பக்கங்களுடையது. விலை அணா-10. ரிப்பன் பிரஸ் முதலிய இடங்களிற் கிடைக்கும். ஆக்கியோர் விலாசத்திற்கும் எழுதிப் பெறலாம்.

(பத்—ர்.)

தமிழ் நாட்டுத் தற்காலத்தார், பாப்பற்றிய இராகங்கள் அடுத்த மதியில் வெளிவரும்.

முக்கியக் குறிப்பு.

நமது மகவின் சந்தாதாரர்கள் சிலர் மாதம் ௧௦ - ஆகியும் சந்தாப்பணம் செலுத்த மறந்தார்கள். அவர்கள் இதனைப் பார்த்த போதேனும் தமது சந்தாப்பணத்தை அனுப்பாமல் இரார் என்றெண்ணுகின்றோம். பத்திராதிபர் கையெழுத்திட்ட இரசீது கொண்டுவரும் ஆள்வசமும் கொடுக்கலாம்.

இங்ஙனம்:

சொ. வேலாயுத முதலியார்,

அக்கிராசனாதிபதி, புதுவைத் தமிழ்ச்சங்கம்.

அறிவிப்பு.

நமது "தமிழ் மகவு" ஒவ்வொரு தமிழ் மாதங்களிலும் உ௦ உக்குள் அதன் சந்தாதாரர்கள் வசம் சேரும். அவ்வாறு சேராவிடின் உடனே அங்கங்குள்ள போஸ்டு மானேஜருக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். மாதந்தோறும் கவனமாய் எல்லா விலாசங்களையும் இருமுறை பார்வையிட்டே பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன. பத்திரிகை மேற்படி தேதிக்குள் வந்து சேராவிடின் அது எமது குறையென்றெண்ணற்க. போஸ்டுகளிலும் விசாரித்துக் கிடைக்காவிடின், பத்திரிகை மானேஜருக்கு எழுதினால் பெறலாம்.

௧௦ - சந்தாதாரர்களைச் சேர்த்து முற்பண மனுப்பும்படி செய்பவர்கட்கு இனமாகப் பத்திரிகை மாதந்தோறும் அனுப்பப்படும். மாதிரிப்பத்திரிகை வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:— "புதுவைத் தமிழ்ச் சங்கம்" ஆபீஸ்

நெ. 48. சங்கப்பிள்ளை வீதி

புதுவை.